தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 | மே 2023 | கனி 6

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்


MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 41
தலைப்பு : சால்வை – Shawl
வேத வாசிப்பு : 1இராஜாக்கள் 19:19



1. எலியா அவன்மேல் தன் சால்வையைப்போட்டான் - 1இரா.19:19
2. எலிசா தன் சால்வையை முறுக்கி - 2இரா.2:8
3. யோனத்தான் தான் போர்த்துக்கொண்டிருந்த - 1சாமு.18:3,4



மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**



Contact Us: 94435 58041

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

## Our TV Program: All Days of the Week

*Every Sunday,Thursday & Saturday 6.00 P.M on Heaven TV*

*Every Monday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Tuesday & Friday 6.00 P.M on Channel 316 TV*

*Every Saturday 8.30 P.M on Nithyam TV*




YouTube : the word of christ

**THE WORD OF CHRIST**
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 மே – 2023 கனி – 6


**ஆசிரியருரை**

## ஆதிஅன்பு - The First Love

ஆதிஅன்பு மிகவும் சிறப்பானது. அந்த அன்பில் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டுமென நம்முடைய தேவனாகிய கர்த்தர் விரும்புகிறார். அநேகர் ஆதிஅன்பை விட்டுவிடுகின்றனர். ஆகையால் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட சபைகளுக்கு கர்த்தர் திருவுளம்பற்றும்போது; "நீ ஆதியிலே கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு" என்று எழுதுகிறார் (வெளி.2:4). ஞானஸ்நானம் எடுத்து பல நல்ல தீர்மானங்களோடு ஜீவிக்கிற சிலர் நாளடைவில் தங்களுடைய விசுவாசத்தில் ஆட்டம் காண ஆரம்பித்துவிடுகிறார்கள். பல விதமான சோதனை வருகிறது என்ன செய்வதென்று தெரியவில்லை, முன்னே இந்தவிதமான பாடுகள் எல்லாம் வரவில்லை, இப்பொழுது பாடுகளும் பிரச்சனைகளும் வந்து வேதனையளிக்கிறது என்பார்கள். பாடுகளும் பிரச்சனைகளும் இல்லாத வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையில்லை. தனக்கு வரக்கூடிய சோதனைகளை சகித்து வெற்றியுள்ள ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழவேண்டும். "ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்" என்கிறார் அப்போஸ்தலனாகிய யோவான் (1யோவா.2:24). துவக்கத்தில் இருக்கிற அன்பும் விசுவாசமும் குறைவதற்கு காரணம், ஆதிமுதல் கேள்விப்பட்ட வசனம் உங்களில் நிலைத்திராதிருப்பதுதான். அந்த வசனத்தை உங்களுடைய இருதயத்தில் வைத்துக் காக்கவேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறீர்கள். ஒரு நிலத்தில் விதைக்கப்பட்ட விதை எப்படி அந்த நிலத்தில் வைத்து பாதுகாக்கப்படும்போது அது வளர்ந்து மரமாகவும், பயிராகவும் வளர்ந்து பலன் கொடுக்கிறதோ அதைப்போல தேவனுடைய வசனத்தை நீங்கள் உங்களுடைய இருதயத்தில் வைத்து பாதுகாக்கும்போது, நீங்களும் பாதுகாப்பாக இருப்பீர்கள், பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள், ஆவிக்குரிய கனிகளையும் கொடுப்பீர்கள்.



"தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில்

அடைத்துவைத்திருக்கிறார்" என யூதா குறிப்பிடுகிறார் (யூதா 6). தேவனுடைய பார்வையில் மனிதர்களாக இருந்தாலும், தேவதூதர்களாயிருந்தாலும் தவறு செய்தவர்களை தேவன் தண்டியாமல் விடார் எனக் காண்கிறோம். தவறு செய்த தேதூதர்களை அதாவது ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாதவர்களை நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார். தேவதூதர்களையே தேவன் தப்பவிடாதிருக்கும்போது, ஆதிஅன்பில் குறைவாக உள்ள உங்களையும் என்னையும் சும்மாவிடுவாரா, ஆகையால் ஆதிஅன்பில் நிலைத்திருங்கள்.

எபிரெய ஆசான் சொல்லும்போது; "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்கிறார் (எபி.12:1). நம்மிலே விசுவாசத்தை துவக்குகிறவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அதை முடிக்கிறவரும் அவரே எனக் காண்கிறோம். நம்மிலே விசுவாசத்தை துவக்கின அவர் மற்றவற்றையும் அருளாதிருப்பாரா, அவர் சகலத்தையும் செய்யவல்லவராயிருக்கிறார். நாம் நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்திலே பொறுமையோடே ஓடவேண்டும். அநேகர் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தை விட்டுவிட்டு வேறுமாதிரியாக நடக்கவும், ஓடவும் முயற்சிக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் நாளடைவில் விசுவாசத்தில் நிலைத்திராமற்போய் விடுகிறார்கள். ஆண்டவர் பேதுருவிடம் பேசும்போது; "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன்சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்" (லூக்.22:31,32). விசுவாசத்தை துவக்குகிற கர்த்தர் அந்த விசுவாசம் ஒழிந்துபோகாதபடி வேண்டிக்கொள்ளவும் செய்கிறார். ஒருவேளை அவர் நமக்காக வேண்டிக்கொள்ளாவிட்டால் நம்முடைய நிலைமை என்னவாகும் என்பதை யோசித்துப்பாருங்கள். இதையெல்லாம் அறிந்தபடியால் பிசாசு இப்படியாக கேட்டுக்கொண்டான். இன்றைக்கு அநேகர் சுளகில் உள்ள பதரைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சுளகினால் புடைத்தால் கோதுமை மணிகள் மட்டுமே நிலைத்திருக்கும், பதர் எல்லாம் பறந்தேபோகும். நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறீர்கள்? உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதா யிருக்கிறது? உங்களுடைய ஆதிஅன்பு குறைந்திருக்கிறதா? அல்லது அப்படியே இருக்கிறதா? அல்லது விசுவாசத்திலே வளர்ந்திருக்கிறீர்களா? பவுல் சொல்லும்போது; "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" என்கிறான் (பிலி.3;12). தேவன் நம்மை எதற்காக தெரிந்துகொண்டுள்ளார் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். அதை அறிந்துகொண்டு நாம் அவர்வழியே செல்லவேண்டும். அநேகர் எதற்காக கர்த்தரை ஏற்றுக்கொண்டோம் என்பதை அறியாமலே போய்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேறு ஒருநபர் ஒரு காரியத்தைச் சொன்னால் அதுவும் சரிதான் என்று அந்தவழியே போக

முயற்சிப்பார்கள். ஆகையால் இயேசு சொல்லும்போது; "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்" என்கிறார் (யோவா.6:44). நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவராயிருந்தால் தேவனுடைய வசனத்திற்குச் செவி கொடுத்து ஆதிஅன்பில் நிலைத்திருங்கள்.

மேலும், "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" என பவுல் சொல்லுகிறார் (எபே.3:12). விசுவாசத்தினாலே என்ன பலன் என்று அநேகர் நினைக்கின்றனர். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என வாசிக்கிறோம். நம்முடைய முற்பிதாக்கள் விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள் வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். நாமும் அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் தைரியம் அடைகிறோம். திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் பாக்கியத்தையும் பெறுகிறோம். எல்லோரும் தேவனிடத்திற்குச் சென்று விடமுடியாது, இயேசு"என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று" சொல்லுகிறார். இயேசு இல்லாமல் தேவனிடத்திற்கு ஒருவரும் செல்லமுடியாது.

மேலும் திடநம்பிக்கை என்று பார்க்கும்போது; பேதுரு ஒரு முறை "ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்" (லூக்.22:33). இவனுடைய நம்பிக்கை திடமானதா? என்றால் இல்லை. கொஞ்சநேரத்திலே இயேசுவை மூன்றுதரம் மறுதலித்தான். சரீர பயம் அவனை ஆட்கொண்டது. கர்த்தர் சொன்னபடியாக அன்று இரவிலே மூன்று முறையும் இயேசுவை மறுதலித்தான். ஆனால் அவனுடைய அறிக்கை எப்படிப்பட்டதாயிருந்தது, காவலிலும் சாவிலும் உம்மைப்பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். அநேகர் சபைக்கு இனிமேல் தவராது கலந்துகொள்ளுவேன் என்பார்கள். சொன்ன மறுவாரமே சபைக்கு வரமாட்டார்கள். இன்னும் அநேகர் நான் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று சொல்லுவார்கள், அப்படிப்பட்டவர்கள் ஒன்றுமே செய்யமாட்டார்கள். நாம் வாயினாலே சொல்லுவதைக்காட்டிலும் வாழ்க்கையில் நடந்து காண்பிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். விசுவாசத்தை கிரியைகளினாலே காண்பிக்கவேண்டும் அதுவே விசுவாசம் இல்லையேல் அப்படிப்பட்ட விசுவாசம் செத்ததாயிருக்கிறது.

இயேசுவினிடத்தில் விசுவாசம் கொண்ட ஒரு நூற்றுக் அதிபதியைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். அவன் "இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்க வேண்மென்று, அவரை வேண்டிக்கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு; நீர் இந்தத் தயவு செய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெபஆலயத்தையும் கட்டினான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப்போனார் வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, நான் உம்மிடத்தில்

வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான். என் வேலைக்காரனை, இதைச்செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர்களை அனுப்பினான். இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்.7:3-8). இந்த அதிபதியினுடைய விசுவாசம் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் காணப்படாத விசுவாசம். இயேசுவானவர் இவனுடைய விசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார். இன்றைக்கு உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதா யிருக்கிறது? கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவர்கள் தங்களுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்காக அல்லது உறவினர்களுக்காக வேண்டிக்கொள்ளுவார்கள். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியோ தன் வேலைக்காரனுக்காக ஆண்டவரை நோக்கி வேண்டிக்கொண்டான். அப்படியானால் எப்படிப்பட்ட ஒரு எஜமானன் என்று பாருங்கள். இப்படிப்பட்ட ஒரு எஜமானனிடம் வேலைபார்த்த அந்த வேலைக்காரன் உண்மையிலே ஆசீர்வதிக்கப்பட்டவன். நீங்கள் ஒரு எஜமானனாக இருந்தால் இந்த நூற்றுக்கு அதிபதியைப்போல இருங்கள். நீங்கள் ஒரு வேலைக்காரனாக இருந்தால் நூற்றுக்கு அதிபதியினிடத்தில் வேலைபார்த்த அந்த வேலைக்காரனைப்போல உங்களுடைய எஜமானனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.

ஆண்டவர் சொல்லும்போது; "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்" (லூக்.7:23). நீங்கள் இயேசுவினிடத்திலும் அவருடைய வசனத்திலும் நம்பிக்கை கொள்ளுங்கள். அப்பொழுது தேவனுடைய மகத்துவங்களைப் பார்ப்பீர்கள். அநேக யூதர்கள் அவருடைய வசனத்தின் நிமித்தம் இடறலடைந்தார்கள். அதைக்குறித்து சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள். உங்களுடைய விசுவாசமும் ஆதிஅன்பும் எப்படிப்பட்டதா யிருக்கிறது? தொடர்ந்து ஆதிஅன்பில் நிலைத்திருங்கள்.

**ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையும் முக்கியமானதா?**

ஆம், "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (எபி.3:14). எகிப்திலிருந்து கானான் தேசம் வரை 40 ஆண்டுகளாக உறுதியாக நிலைத்திருந்தவர்களுக்கே அந்த தேசத்தில் பங்குகிடைத்தது. அதை நம் முற்பிதாக்கள் பங்கிட்டுக்கொடுத்தார்கள். அதைப்போல நாம் ஆரம்பத்தில் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது கொண்டுள்ள நம்பிக்கையை விட்டுவிடாது காத்து முடிவுபரியந்தமும் கஷ்டத்திலும் நஷ்டத்திலும் கர்த்தருடையவர்களாக இருக்கும்போது அவரிடத்தில் பங்குள்ளவர்களா யிருப்போம். அவருடைய ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கும். நாம் நித்தியத்தில் அவரோடு பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இயேசுவின் மூலமாக பெற்றுக்கொள்ளுவோம். ஆகையால் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை அசட்டை செய்துவிடாதிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# இன்று ஏன் ஒரே ஞானஸ்நானம் உண்டு?

WHY THERE IS BUT ONE BAPTISM TODAY? *-J.C.Choate*



இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கை யுடையவர்களாக இருக்கிறீகளோ அல்லது இல்லையோ நான் அறியேன், ஆனால் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருக்கிறவர்கள் மத்தியில் அநேக ஞானஸ்நானங்கள் உண்டெனப் போதிக்கிறவர்கள் இருக்கின்றனர். அவைகளில் தண்ணீரில் மூழ்குவதால் ஞானஸ்நானம், ஒருவனுடைய தலையில் தண்ணீரை தெளிப்பதால் ஞானஸ்நானம், ஒருவனுடைய தலையில் தண்ணீரை ஊற்றி ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் இன்னும் இதுபோன்ற பல முறைகளில் ஞானஸ்நானம் உண்டெனக் கூறப்படுகிறது, இந்தக் காரியத்தைக் குறித்து போதிக்கிறவர்களுடைய கருத்துப்படி ஞானஸ்நானத்திற்கு பல வேறுபட்ட நோக்கங்கள் உள்ளன. பலர், ஞானஸ்நானமானது ஒருவனுடைய இரட்சிப்பிற்கான அடையாளமென கூறுகின்றனர், மற்றவர்கள் ஞானஸ்நானமானது பாவங்களின் மன்னிப்புக்கென்றும், ஒருவனை கிறிஸ்துவுக்குட்படுத்துவதற்கென்றும், அவருடைய சபைக்குள் சேர்ப்பதற்கென்றும் என போதிக்கின்றனர்.

வேதாகமம், ஒரே ஒரு ஞானஸ்நானம் மட்டுமே உண்டென்று போதிக்கிறது, பவுல் “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்” (எபே. 4:4-6) என்கிறார். ஒரே தேவனும், ஒரே கர்த்தரும் அல்லது கிறிஸ்துவும், ஒரே ஆவியும் அல்லது பரிசுத்த ஆவியும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே சரீரமும், ஒரே நம்பிக்கையும் உண்டென தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவமனிதன் சொன்னதை தயவு செய்து கவனியுங்கள் இவையெல்லாவற்றிற்கும் மேலாக, அவன் ஒரே ஞானஸ்நானம் உண்டென வலியுறுத்திக் கூறுகிறான். ஒரே தேவனும், ஒரே கிறிஸ்துவும், இன்னும் இதுபோல் மற்றவைகளும் ஒரே காரியமாக இருக்கிறதாக பொருள்படுமானால் பிறகு ஒரே ஞானஸ்நானம் என்பதும் ஒரே ஞானஸ்நானம் தானே.

ஆனால் இது எந்த ஞானஸ்நானமாக இருக்கும்? இன்று மனுஷர் பேசுகின்ற ஞானஸ்நானத்தைத் தவிர, வேதவாக்கியங்களிலும் கூட பல்வேறு ஞானஸ்நானங்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம், உதாரணமாக, லூக்கா 7:29-ல் ஜனங்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டதாக வாசிக்கிறோம், கிறிஸ்து தம்மை சோதிக்கும்படி வந்த ஒரு பிரிவினரை நோக்கி:

“யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்” (மாற்கு 11:30). கிறிஸ்து யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் (மத், 3:13-17), கிறிஸ்து எல்லா நீதியையும் நிறைவேற்றும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோதிலும், பொதுவாக ஜனங்கள் சபையாகிய கர்த்தருடைய ராஜ்யத்தின் வருகைக்கு ஆயத்தம்படுத்தும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றார்கள், ஆனபடியினால் இது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (லூக்.3:3). பவுல் எபேசுவில் யோவானுடைய ஞானஸ்நானத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருந்த சில மனுஷரை எபேசுவில் கண்டான், ஆனால் அவர்கள் ஆவி அல்லது பரிசுத்த ஆவியைப்பற்றி கேள்விப்படாதவர்களாயிருந்தனர், ஆனபடியினால் அவன் அதன்பிறகு யோவானுடைய ஞானஸ்நானத்தின் நோக்கத்தைக் குறித்த காரியங்களை அவர்களுக்குப் போதித்தான். “யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான், அதைக்கேட்ட போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்” (அப்.19;1-5). யோவானுடைய ஞானஸ்நானமானது சந்தேகத்திற்கு இடமளிக்கவில்லை. இது ஒரு நோக்கத்தை நடப்பித்தது அதன்பின் அது இல்லாமல் முடிவடைந்தது.


மத்தேயு 3;11,12-ல் யோவான் ஸ்நானகன், அல்லது ஞானஸ்நானங்கொடுத்த யோவான் அல்லது தண்ணீரில் மூழ்கச்செய்தவன் கிறிஸ்து ஞானஸ்நானம் கொடுப்பாரென இரு வகையான ஞானஸ்நானங்களைப் பற்றி பேசினான், நாம் வாசிக்கிறோம், “மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார், தூற்றுக்கூடை அவர்கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.” இங்கே யோவான் கிறிஸ்து எவ்வாறு ஜனங்களை நடத்துவார் என்பதை அறுவடை செய்கிற ஒருவராக படம்பிடித்து சுட்டிக்காட்டி விளக்குகிறான், அந்நாட்களின் ஜனங்கள் கோதுமை அறுவடையைக் குறித்து நன்கு அறிந்தவர்களாயிருந்தனர். அந்த கோதுமை கதிரடிக்கப்படும், பின்பு காற்றின் உதவியினாலோ அல்லது தூற்றுக்கூடையினாலோ பதரெல்லாம் தூற்றப்பட்டு கோதுமை மணிகள் பிரித்தெடுக்கப்படும், அந்த கோதுமை சேகரிக்கப்பட்டு உணவுக்காக பத்திரப்படுத்தப்படும் ஆனால் பதர் அல்லது உபயோகமற்ற பொருள் சுட்டெரிக்கப்படும். இந்த முறையிலே கிறிஸ்து பரிசுத்த

ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பாரென யோவான் கூறினான், அதன்பிறகு, தேற்றாவாளர் அல்லது பரிசுத்த ஆவியை அப்போஸ்தருக்கு அனுப்புவேன் என்பதாக இயேசு அவர்களுக்கு வாக்குப் பண்ணினார் (யோவா 15:26; யோவா. 16:7, 13) அப்போஸ்தலர் 1:8ல் மீண்டும் அவர் அவர்கள் மேல் பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்பதாக வாக்குப் பண்ணினார். லூக்.24:49யும் வாசியுங்கள்.

அப்போஸ்தலர் 2ல் பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள்மேல் ஊற்றப்படுகிறதையும், கிறிஸ்து அவர்களுக்குப் போதித்திருந்த சகலத்தையும் நினைப்பூட்டும்படிக்கும் அந்நிய பாஷைகளில் பேசும்படிக்கும் அற்புதங்களை நடப்பிக்கும்படிக்கும் அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்படுகிறதையும் வாசிக்கிறோம். இவர்கள் மூலம் சகலமும் ஆசீர்வதிக்கப்படும். ஆனால் கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பாரென்றும் யோவான் சொன்னான். இது எதற்கு ஒப்பிடப்படுகிறது? கோதுமையானது நீதியைக் குறிக்கிறது இது இரட்சிக்கப்படும் பின்பு பதர், துன்மார்க்கத்தைக் குறிக்கிறது இது சுட்டெரிக்கப்படும், கிறிஸ்து அப்போஸ்தலரை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்துவார், ஆனால் அவர் துன்மார்க்கரையோ அக்கினியினால் ஞானஸ்நானப்படுத்துவார். ஞானஸ்நானமானது தண்ணீரில் மூழ்கடிக்கப்படுதல் என்றும் ஆனபடியினால் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் மூழ்கடிக்கப்பட்டார்கள் அல்லது நிரப்பப்பட்டார்கள் என்பதையும் கிறிஸ்து அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுப்பாரென இவ்வார்த்தை சொல்லுகிறபோது துன்மார்க்கர் அக்கினியினால் அமிழ்த்தப்படுவார்களெனவும் இது அர்த்தமாகிறதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறாக துன்மார்க்கர் தீர்க்கப்படுவார்களென தேவவாக்கியங்களில் நாம் எங்கே வாசிக்கிறோம்? முதலாவது ஒருநாள் கிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்ப்பாரெனவும் துன்மார்க்கர் நரகத்திலே தள்ளப்படுவார்களெனவும் (2பேது 2:4) அல்லது அவர்கள் நித்திய ஆக்கினை அடையப் போவார்களெனவும் (மத்.25:46) நாம் அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் நரகம் ஒரு அக்கினிகடல் என விவரிக்கப்பட்டுள்ளது (2பேது 3:7, யூதா 7, வெளி.2:10,14; 21:8) துன்மார்க்கர் தேவனை அறியாதவர்கள் இழந்து போனவர்கள் நித்திய அழிவாகிய அக்கினி கடலில் மூழ்கடிக்கப்படுவார்கள், அல்லது அமிழ்த்தப்படுவார்களென அர்த்தமாகிறது. நிச்சயமாக இருதயத்தில் செம்மையான ஒருவனும் அக்கினியால் ஞானஸ்நானம் பெற விரும்பமாட்டான்.

**ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குள் பெறுவது "கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" (கொலோசெயர் 2:11)**



பெண்கள் பகுதி

## நல்லவராய் இருப்பதே நன்று

## Being "Good" is Good Enough

*-Betty*



எல்லா சமயமும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையாக இல்லையா? ஒரு மனிதன் **நேர்மையாகவும் உண்மையாகவும், ஒரு சிறந்த அண்டைவீட்டானாகவும், ஒரு சிறந்த மனிதனாகவுமிருக்க** முயற்சிக்கிறவனாகவும் இருந்தாலே தேவன் அவனை ஏற்றக்கொள்ளுவார் என அனைத்து சமயங்களும் போதிக்க வில்லையா?

அதிகமாக ஜனங்களின் தனிப்பட்ட விதத்தில் உள்ள நற்குணமே தேவனை திருப்தி செய்ய போதுமானது என நம்புவதையே விரும்புகின்றனர். மேலும் **அவர்கள் இது குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதை கண்டுகொள்ளும்படி அவருடைய வார்த்தையை படிக்கின்றதை தவிர்ப்பதையே தெரிந்து கொள்ளுகின்றனர், ஆனால் மாறாக, தங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்கு தங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்கின்றார்கள்.** எப்படியோ, தேவன் அவர்களிடத்தில் அதிகமானதை எதிர்பார்த்தாலும் கூட, அவர் அதிகம் எதிர்பார்க்கிறார், அவருக்குக் கீழ்படியும்படியும்போது தங்களுடைய வீழ்ந்துபோன நிலையை மன்னிப்பார் என்று அவர்கள் **அறியாதவர்களாகவே** இருக்கின்றனர். பிடிவாதமான அறிவீனம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா? தனிப்பட்ட விதத்திலான நற்குணம் போதுமானதா? "உண்மையாகவே, இந்த அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்;** மேலும் ஒரு நாளைக் குறித்திருத்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்"(அப்.17:30,31).

இந்த வசனம், நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் நம்மைக் கேட்டுக் கொண்டதைக் குறித்த நம்முடைய அறியாமைக்காக நம்மை மன்னிக்க மாட்டார் என தெளிவாகக் கூறுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் கண்டிப்பாக **அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.** அவர் கட்டளையிட்டிருப்பதை அவருடைய வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கற்பிப்பாராக.

நாம் அறியாதிருப்போமானால், நாம் அவருக்குக் கீழ்படியமுடியாது. ஆகவே நாம் கற்றுக் கொள்ளுகிறதான இந்த காரியம் ஒரு கட்டளையாகும். இதை இயேசு, "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்"(யோவா.12:48) என எச்சரித்தார். **நாம் அவருடைய எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: அறியாமை நம்மை இரட்சிக்காது!**

மேலும் நாம் நம்முடைய சுயநீதி ஜீவியத்தினால் இரட்சிப்படைய முடியாது ரோம.3:10,23, "அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை,.....எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி...", எனக் கூறுகிறது. ஏசாயா59:1,2–ல், "இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. **உங்கள் அக்கிரமங்களே**

**உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது**'' என வாசிக்கிறோம்.

மனிதன் முதிர்ச்சியடைந்து பாவத்தைத் தெரிந்துகொள்ளும் போது, அந்தப் பாவங்கள் அவனுக்கும் தேவனுக்குமிடையே ஒரு சுவர் போலாகி பிரிவினையை உண்டாக்குகிறது. நாம் நம்மை பாவமற்றவர்களாக மாற்றமுடியாது; ஆனபடியினால் நாம் நம்மை மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டுவர முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் பயிற்சிக்கிற ''நற்குணம்'' எதுவாயினும் நம்முடைய பாவத்தினால் கறைப்படுத்தப்பட்டதாய் நம்முடைய வாழ்வில் எப்போதும் தோற்றமளிக்கிறது.

**இதற்குப் பரிகாரம் என்ன?**

நாம் 1பேது.2:21–25–ல்''இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், **கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு**, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப்போனார். 'அவர் பாவஞ்செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை'(ஏசா.53:9). அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, **அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** (ஏசா.53:5). சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்''என வாசிக்கிறோம்.

மேலும் 2கொரி.5:21, ''**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு,** பாவம் அறியாத அவரை **நமக்காகப் பாவமாக்கினார்**'' என விளக்குகிறது. ஆனால் நாம் பாவிகளாயிருப்பதினால், நாம் மீண்டும் ஒரு முறைகூட வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படிக்கும் நம்முடைய பாவங்கள் நீங்கி அவருடைய நீதிக்குள்ளாக நாம் இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படிக்கும் நாம் ஒரு இரட்சகரைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய பாவங்களை நீக்கும் படிக்கு இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தில் அவைகளை சிலுவையின் மேல் சுமந்தார். ''நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று...'' ரோம.6:6 விளக்குகிறது.


எப்பொழுது மற்றும் எவ்வழியில் நாம் பாவத்திற்கு மரித்து தேவனுக்கு முன்பாக புது சிருஷ்டியாக மாறி, அவருடைய குமாரனின் நீதிக்குள்ளாக உடுத்து விக்கப்படுகிறோம்? ''... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்''(ரோம.6:3,4).

நீங்கள் உங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்க அல்லது இரட்சிப்பிற்காக தேவன் எதிர்பார்க்கிறதைப் பற்றிய உங்கள் அறியாமையை சார்ந்திருக்க தீர்மானித்திருப்பீர்களானால், **திரும்பிச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வு செய்யுங்கள்.** இழந்த நிலையில் தொடர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாதீர்கள்.

பா.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

17



## பரிசுத்த வேதாகமத்தில் லேவி
## Levi In The Holy Bible

1. யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த மூன்றாம் மகன் - ஆதி.29:34
2. லேவிக்கு அவன் சகோதரரோடே பங்கும் சுதந்தரமும் இல்லை - உபா.10:9
3. அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள் - ஆதி.49:5-7
4. லேவியர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படியே மற்றவர்களுடனே எண்ணப்படவில்லை - எண்.1:47
5. லேவியின் வழியில் வந்த கோராகு மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடினார்கள் - எண்.16:1-3
6. கர்த்தர் தமக்கு ஆராதனை செய்ய லேவியின் குமாரரைத் தெரிந்துகொண்டார் - உபா.21:5
7. லேவியோடே அவருடைய உடன்படிக்கை - மல்.2:4-7
8. லேவியின் குமாரரில் எண்ணப்பட்டவர்கள் - எண்.3:14
9. வெளிப்படுத்தலில் எண்ணப்பட்ட லேவி கோத்திரம் - வெளி.7:7
10. லேவி 137 வருஷம் உயிரோடிருந்தான் - யாத்.6:16

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**லேவியானவனும் தசமபாகம் கொடுத்தானா?**

**விடை:** ஆம் - "அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்" எபி.7:9,10



பு.ஏ

**வேதாகம கதாபாத்திரங்கள்**

**Bible Characters**

**18**




## பரிசுத்த வேதாகமத்தில் நுற்றுக்கதிபதி
## Centurion In The Holy Bible

1. கப்பர்நகூமைச் சேர்ந்தவன் - லூக்.7:2
2. பிரியமான வேலைக்காரனுக்காக இயேசுவை நோக்கி வேண்டிக்கொண்டான் - லூக்கா 7:2
3. யூதருடைய மூப்பர் கருத்தாய் இயேசுவை நோக்கிவேண்டிக்கொண்டார்கள் - லூக்.7:4
4. யூதர்களை நேசித்து அவர்களுக்கு ஜெபஆலயமும் கட்டிக்கொடுத்தான் - லூக்.7:5
5. நீர் என் வீட்டு வாசலுக்குள் வர நான் பாத்திரனல்ல - லூக்.7:6
6. என்னைப் பாத்திரவானாக எண்ணவில்லை - லூக்.7:7
7. எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகரும் உண்டு - லூக்.7:8
8. இயேசு: இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக்காணவில்லை என்றார் - லூக்.7:9
9. அனுப்பட்டவர்கள் வீட்டுக்கு வந்தபோது - லூக்.7:10
10. முதலாவது இவன் இயேசுவைக்குறித்து கேள்விப்பட்டான் (விசுவாசம் கேள்வியினாலே வரும் - ரோமர் 10:17) - லூக்.7:3

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**


**கப்பர்நகூமிலே எந்த மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்?**

**விடை:** ராஜாவின் - ..."இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்" (யோவா.4:46)



## வாசகர் கடிதம்...

அய்யா, இதழ் 14.02.2023 மாலை கிடைத்தது
ஆர்வத்தின் காரணமாக கண் விழித்து விடைகள்
கண்டு எழுதி அனுப்புகிறேன்
தங்களின் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' இதழ் வாசகர்
E.அதிசயம்



# ஆசிரியர் கடிதம்...



**வா**சகர் அனைவருக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

உங்களுடைய கடிதங்கள் எங்களை உற்சாகப்படுத்துகிறது. ஒரு சில மொட்டை கடிதங்களை நாங்கள் கர்த்தருடைய பாதத்தில் வைத்து ஜெபிக்கிறோம். இயேசுவுக்கு இருந்த பாடுகளும் பிரச்சனைகளும் எங்களுக்கும் ஒவ்வொருநாளும் வந்து கொண்டிருக்கிறது. "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (மத்.5:11) என்ற வசனத்தின்படி நாங்கள் பாக்கியவான்காளாகவே இருக்கிறோம். அவர்களோ, "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்" என்ற மத்.12:36 ம் வசனத்தை நினைப்பூட்டுகிறோம்.

எமது வெளியீடான வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வெளிவந்த செய்திகள் அடங்கிய 9வது புத்தகத்தை எழுதிப்பெற்றுக் கொள்ளுங்கள். வேத அறிவுப்போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இப்புத்தகம் அனுப்பிவைக்கப்படும் நீங்கள் எழுதவேண்டிய அவசியமில்லை. மற்ற அனைத்து வாசகர்களும் எழுதிப்பெற்றுக்கொள்ளுங்கள். இப்புத்தகத்தை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். கர்த்தருடைய வசனத்தை அனைவரும் பெற்று இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக உதவிடுங்கள்.

ஆந்திரா பகுதியில் கர்த்தருடைய ஊழியத்தை துவக்கியுள்ளோம். கர்த்தருடைய சபையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிற அநேக உடன்பணியாட்கள் இணைந்திருக்கிறார்கள். தொடர்ந்து இவ்வூழியம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

அன்புடன்,
ஆசிரியர்


'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## வேத அறிவுப்போட்டி 270-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. ஏசாயா | - ஏசா.45:15 |
| 2. ஆம் | - மாற்.3:21 |
| 3. எரேமியா | - எரே.15:17 |
| 4. சரீரத்தின் | - லூக்.11:34 |
| 5. மிதித்தார் | - புல.1:15 |
| 6. இயேசு | - யோவா.14:30 |
| 7. எசேக்கியா | - எசே.33:7 |
| 8. ஆம் | - அப்.8:6 |
| 9. தரியு | - தானி.6:1 |
| 10. பவுல் | - ரோம.7:10 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. E. அதிசயம் | - பனைகுடி |
| 2. A. டேவிட் ஜெயசந்திரன் | - மதுரை |
| 3. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 4. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 5. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 6. Mrs. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 7. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 8. Mrs. ஜேன் தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 9. Mrs. ஆலிவ்ஜெயபால் | - கோவை |
| 10. Mrs. ஃபிராங்கலினா ஜான் | - ஊட்டி |
| 11. Mrs. ஜெபாகுட்டி மோசஸ் | - திருநெல்வேலி |
| 12. D. அன்புகமலம் | - கோவை |
| 13. P. சந்திராடேனியேல் | - நாஞ்சான்குளம் |
| 14. S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 15. C. அருள்ராஜ் | - சென்னை |
| 16. Mrs. சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 17. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 18. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 19. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 20. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 21. S. ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 22. T. ராஜாத்தி | - தேனி |
| 23. Mrs. அன்னாள் ஜெபக்கனி | - கோவை |
| 24. Mrs. ஜெமிநல்லையா | - கோவை |
| 25. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 26. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 27. J. செல்வராஜ் | - புத்தியம்புத்தூர் |
| 28. R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 29. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 30. J. ஜெயபாணிஜெபராஜ் | - மேற்கு தாம்பரம் |
| 31. J. பிச்சை | - விருதுநகர் |
| 32. Mrs. ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 33. A. டெய்சி | - தூத்துக்குடி |
| 34. D. விஜயகாந்தி | - வேலூர் |
| 35. Sis. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 36. M. ராமசந்திரன் | - ஒட்டநத்தம் |
| 37. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 38. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 39. Mrs. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 40. R. பாரதி | - கோபி |
| 41. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 42. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 43. Mrs. ராஜம்மாள் | - பெங்களூர் |
| 44. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 45. Mrs. கெத்சிசெல்வி | - சென்னை |

## வேத அறிவுப்போட்டி 271-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. எப்பிராயீம் | - ஓசி.7:8 |
| 2. அயோக்கியமாயிருக்குமே | - 1கொரி.14:35 |
| 3. ஆம் | - யோவே.2:25 |
| 4. பவுல் | - 2கொ.7:4 |
| 5. இஸ்ரவேலர் | - ஆமோ.4:11 |
| 6. பவுல் | - கலா.1:12 |
| 7. மாலுமிகள் | - யோனா 1:14 |
| 8. இயேசுகிறிஸ்து | - எபே.2:16 |
| 9. இல்லை | - மீகா 6:7 |
| 10. எப்பாப்பிரோதீத்து | - பிலி.2:25 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 2. Mrs. ஜெயமேரிதாய் | - திண்டுக்கல் |
| 3. Mrs. ஜேன்தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 4. D. அன்புகமலம் | - கோவை |
| 5. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 6. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 7. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 8. J. பிச்சை | - விருதுநகர் |
| 9. Mrs. கெத்சி செல்வின் | - சென்னை |
| 10. D. சாந்தாதேவி | - தேனி |
| 11. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 12. A. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 13. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 14. S. அசோக்குமார் | - தூத்துக்குடி |
| 15. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 16. S. ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 17. E. அதிசயம் | - விருதுநகர் |
| 18. Mrs. சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 19. P. சந்திராடேனியேல் | - திருநெல்வேலி |
| 20. A. அன்னாள் ஜெபக்கனி | - கோவை |
| 21. Mrs. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 22. M. ராமசந்திரன் | - ஒட்டநத்தம் |
| 23. Sis. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 24. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 25. D. விஜயகாந்தி | - கூத்தம்பாக்கம் |
| 26. R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 27. J. மேரி ஜெயக்குமார் | - மதுரை |
| 28. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 29. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 30. Mrs. ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 31. Mrs. ஜெயாபாணிஜெபராஜ் | - மேற்கு தாம்பரம் |
| 32. R. பாரதி | - கோபி |
| 33. Mrs. ஜெமிநல்லையா | - கோவை |
| 34. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 35. T. ராஜாத்தி | - தேனி |
| 36. J. ஜான்சி | - ஆனைமலை |
| 37. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 38. Mrs. ருக்மணி ஜெயசீலன் | - தேனி |
| 39. Mrs. ரூத் ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 40. C. அருள்ராஜ் | - சென்னை |
| 41. S. ஓசியா ஹரிராகவன் | - திருவள்ளூர் |
| 42. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 43. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |

"பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்"
பிரசங்கி 8:12

பெண்கள் பகுதி

# நம்முடைய இருதயத்தைப் பக்குவப்படுத்துவோம்

## Let`s Prepare Our Heart

*-Glory Arjunan*



**ஸ்**திரீகளாகிய நாம் நம்முடைய இருதயத்தைப் பக்குவப்படுத்துவது அல்லது ஆயத்தப்படுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். நாம் எதை எதையோ சாதிக்க வேண்டுமென்று நினைத்து நம்முடைய இருதயத்தில் அநேக தீர்மானங்களையும் திட்டங்களையும் வகுத்து அவைகளையெல்லாம் செய்து நிறைவேற்ற ஆயத்தப்படுகிறோம் அல்லது நம்முடைய இருயங்களைப் பக்குவப்படுத்துகிறோம். ஆனால் கடைசி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாமோ கர்த்தரைத் தேடவோ, கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படவோ மறந்து, பிசாசு நம் கண்களுக்கு முன்பாக நிறுத்துகின்ற உலக சம்பத்துக்களாகிய பணம், பொருள், வீடு, வாசல் என்று அழிந்து போகக் கூடிய இவைகள் மீது கவனம் செலுத்தி, ஆதியில் ஏவாள் செய்த அதே தவறையே செய்து கொண்டு நாட்களை வீணடிக்கிறோம். முடிவிலே மிகவும் பரிதபிக்கக்கூடியவர்களாக மாறுவோம்! எனவே இதற்கெல்லாம் நம்மை தப்புவித்துக்கொண்டு நித்திய ஆசீர்வாதத்தைப் பெறும்படிக்கு நம்முடைய இருதயத்தைப் பக்குவப்படுத்துவோம். எதற்கு மற்றும் எப்படி நம் இருதயத்தைப் பக்குவப்படுத்த வேண்டும் என்று வேதபாரகனும் ஆசாரியனுமாகிய எஸ்றா விடமிருந்து கற்றுக்கொள்ளுவோம்.

"கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும் இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும் எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" என்று எஸ்றா7:10ல் வாசிக்கிறோம். இவ்வசனத்தின்படி எஸ்றா மூன்று காரியங்களைச் செய்யும்படி தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான் எனத் தெரிகிறது அறிகிறோம்.

**முதலாவதாக,** கர்த்தருடைய வேதத்தை ஆராய தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான். He had preperd his heart to seek the Law of the Lord. தாவீதும் கூட "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று (சங்.1:2) எழுதியிருக்கிறான். கர்த்தருடைய வேதத்தை ஆராய்வதும் தேவனைப் பிரியப்படுத்துவதும் ஏதோ ஏதேச்சையாக நடக்கும் காரியமல்ல. உண்மையாகவே தேவனிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும் அன்புகூரும்போது அவருடைய வேதத்தை ஆராயும் விருப்பமும உண்டாகும். அப்படி கர்த்தருடைய வேதத்தை ஆராய்ந்து, அதை தியானிக்கும்போது ஆவிக்குரிய ரீதியில் நாம் புதுப்பிக்கப்படுவோம். கர்த்தருடைய வேதத்தை வாசிப்பதற்கும், ஆராய்ந்து பார்ப்பதற்கும் நாம் நேரத்தை ஒதுக்காமலிருந்தால் நிச்சயமாகவே நாம் ஆவியில் செத்தவர்களாகவும் தேவ ஆசீர்வாதங்களை இழக்கக்கூடியவர்களாகவும் காணப்படுவோம். எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராய்வதில் உறுதியுடைவனாக இருந்ததோடல்லாமல், வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்படி தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான். ஆம், நம்முடைய இருதயம் கர்த்தருடைய வேதத்தில்

வாஞ்சையாக இருக்கும்போது நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு நாளுக்கு நாள் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டே வரும். இயேசு "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" என்றார் (யோவா.5:39). நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் காத்துக் கொண்டிருக்கிற நம்மைப் பார்த்து, "ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" என்று 2பேது.3:14ல் பேதுரு குறிப்பிடுகின்றான். நாம் வேதத்தை ஆராய்ந்து பார்ப்பது மிகமிக அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் வேதம் தேவனுடைய வார்த்தைகளாக இருக்கிறன்றபடியால் விடாமுயற்சியுடனும் ஊக்கத்துடனும் வேதத்தை ஆராய்ந்து பார்க்க நம்முடைய இருதயத்தைப் பக்குவப்படுத்தவேண்டும். அப்போது தான் தேவனுடைய சித்தம் இன்னதென்று நாம் புரிந்து கொள்ள முடியும்.

**அடுத்ததாக,** எஸ்றாவைக் குறித்து வாசிக்கும்போது (எஸ்.7:10) அவன் வேதத்தை ஆராய்வதற்கு மட்டுமல்லாது, அதின்படி செய்வதற்கும் தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான். He had Prepared his heart to do the Law of the Lord. எஸ்றா, கர்த்தர் தனக்குச் சொன்னதைத் செய்யும்படிக்குத் தன் இருயத்தில் தீர்மானித்திருந்தான். தாவீதின் சங்கீதம் 40:8ல் "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" என்று எழுதப்பட்டுள்ளது. அந்நாட்களில் இஸ்ரவேலர் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தபடியால் எஸ்றா மிகுந்த துக்கத்தோடே தன் சால்வையைக் கிழித்துக் கொண்டு முழங்கால்படியிட்டு கர்த்தருக்கு நேராக தன் கைகளை விரித்து ஜெபம்பண்ணுகிறான் (எஸ்றா9:5,6). ஆம், இஸ்ரவேலர் கர்த்தருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் அறிந்தும் அதின்படி செய்யாததால் எஸ்றா அவர்களினிமித்தம் வெட்கிக் கலங்கி, எங்கள் அக்கிரமம் பெருகிற்று என்று தேவனை நோக்கி முறையிடுகிறான். அன்பு சகோதரிகளே, நாம் என்ன சொல்லுவோம்? நாங்கள் வேதத்தை வாசிக்கிறோம், ஜெபிக்கிறோம், வேத வினா போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுப் பொருட்களைப் பெறுகிறோம், சபைக்குச் செல்லுகிறோம், வேதவசனங்களைக் கேட்கிறோம் என்று சொல்லி அத்தோடு திருப்தியடைகிறோமா? சிந்தியுங்கள்!

அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருங்கள், அவிசுவாசிக்கும் விசுவாசிக்கும் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகத்துக்கும் சம்பந்தமேது? என்ற வசனங்களையெல்லாம் மறந்து உங்கள் பிள்ளைகளுக்கு அவிசுவாசிகளோடும், தேவனுக்குப் பிரியமில்லாத விக்கிரகாராதனை செய்யும் ஜனங்களோடும் சம்பந்தம் கலந்து திருமணம் செய்து வைக்கிறீர்களா? "அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்.1:22) என வேதம் கூறுகிறது. இயேசுவும் கூட "...அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்" (லூக்.11:28). தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. வீணான

மனுஷனே கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமோ?" (யாக்.2:19,20) என்று வேதம் கேள்வி எழுப்புகிறது. ஆம், "கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" (யாக்.2:26). நாமும் கூட தேவனை விசுவாசித்து, அவருடைய வேதத்தை வாசிக்கிறோம், ஆனால் அதின்படி செய்ய நம் இருதயத்தை ஆயத்தப்படுத்துகிறோமா? நாம் கர்த்தருடைய கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்க நம் இருதயத்தில் அசையாத தீர்மானம் கொண்டு, அதின்படி செய்ய எஸ்றாவைப்போல நம் இருதயத்தைப் பக்குவப்படுத்துவோம் அல்லது ஆயத்தப்படுத்துவோம்.

**கடைசியாக,** நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும் எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான் (எஸ்.7:10). He had prepred his heart to teach in Israel statues and judgments. ஒரு நல்ல ஆசிரியை, தான் கற்றுக் கொண்டதின்படி செய்யவும் அதை மற்றவர்களுக்குப் போதிக்கவும் விரும்புவாள். அந்தப்படியே கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற நாம் வேதத்தை ஆராய்ந்து அதின்படி நடப்போமானால், கர்த்தருடைய இரட்சிப்பின் சுவிசேஷத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புவோம். இல்லை, அப்படியெல்லாம் செய்ய முடியாது, என்மட்டில் நான் வேதம் வாசிக்கிறேன், அதை ஆராய்ந்து பார்க்கிறேன், ஜெபிக்கிறேன், என்னால் கூடுமானவரை அதின்படி செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, சுயநலமாக வாழ்வோமானால், அன்று ஒரு தாலந்தைப் பெற்று நிலத்தில் புதைத்து வைத்த ஊழியக்காரனைப் போல தான் இருப்போம். தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற இப்படிப்பட்ட ஸ்திரீகள் சமுதாயத்தையும், உறவுகளையும் பார்த்து தங்களை ஒளித்துக் கொள்ளுகின்றனர். "உனக்காக மரித்தேனே எனக்காக நீ என்ன செய்தாய்" என்று இயேசு நம்மைப் பார்த்து கேட்பாரானால் நாம் என்ன பதில் சொல்லுவோம்? நாம் நம் அளவில் சரியாக இருப்போம் என்று சொல்லி அழிந்து போகின்ற ஆத்மாக்களைக் குறித்து கவலையற்றிருப்போமானால் அநேக ஆசீர்வாதங்களை இழக்க நேரிடும். இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே இயேசு இந்த பூமிக்கு வந்தார். நமக்கு யாரோ ஒருவர் இயேசுவைப் பற்றி போதித்ததினால், நாம் இன்று இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தர் தம் சபையில் நம்மை சேர்த்துள்ளார். கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையை உடையவர்களாக, நாம் கற்றுக்கொண்ட வேதவாக்கியங்களையும், கற்பனைகளையும் நம்மைச் சுற்றியிருக்கிறவர் களுக்கும், உறவினர்களுக்கும், இன்னும் கிறிஸ்துவின் உபதேசத்தில் நடக்காமல் மீறி நடக்கிற ஸ்திரீகளுக்கும் கிறிஸ்துவின் உபதேசத்தைக் குறித்து பேசி கிறிஸ்துவுக்குள் கொண்டு வர ஒரு நல்ல ஆசிரியைப் போல கடினமாக உழைப்போம்.

அன்பான சகோதரிகளே, அந்நாட்களில் தேறின வேதபாரகனாகிய எஸ்றா எவ்வாறு "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும் தன் இருதயத்தை எவ்வாறு பக்குவப்படுத்தியிருந்தானோ, அவ்வாறு நாமும் செய்ய நம் இருதயத்தை பக்குவப்படுத்துவோம் (ஆயத்தப்படுத்துவோம்). கர்த்தராகிய இயேசு "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" (வெளி.22:12) என்கிறார். அவருடைய சத்தத்துக்குச் செவிசாய்த்து கிரியை நடப்பிப்போம், சுயநலமாக வாழ்வதை, தவிர்ப்போம். கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.



World
Evangelism
Bible
School

**ஏழாவது பட்டமளிப்பு விழாவில்**
**பட்டம்பெற்ற சகோதரர்கள் பீட்டர் கிருபாகரன்**
**மற்றும் தங்கப்பாண்டி**
**நிர்வாகி அர்ஜுனன்**



# ஜெபியுங்கள்



- சென்ற மாதம் சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டத்தை தேவன் ஆசீர்வதித்ததற்காக...
- ஆந்திரா பகுதியில் ஊழியம் செய்ய தேவன் கொடுத்த வாய்ப்பிற்காக...
- இம்மாதம் நடைபெறவுள்ள வாலிபர் கூட்டத்திற்காக...
- இரண்டு ஆண்டு மொபைல் வழியாக வேதாகமத்தைக் கற்றுக்கொண்டு WEBS மூலமாக பட்டம்பெற்று ஊழியத்தை துவக்கியுள்ள சகோதரர்களுக்காக ...
- கிறிஸ்துவின் சபையார் நடத்தும் மே மாத கூட்டங்களுக்காக...

**"ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்" – யாக்கோபு 5:16**

When people saw a barren woman in Sarah,
God saw the mother of all nations

சாராவில் ஒரு மலடி பெண்ணை
ஜனங்கள் கண்டபோது
தேவன் எல்லா ஜாதிகளுக்கும்
தாயாகக் கண்டார்

When people saw a poor young shepherd in David
God saw a mighty king of Israel

தாவீதில் ஒரு எளிய வாலிப மேய்ப்பனை
ஜனங்கள் கண்டபோது
தேவன் இஸ்ரவேலின் ஒரு வலிமைமிக்க
ராஜாவாகக் கண்டார்

When people saw a poor prisoner in Joseph,
God saw a powerful minister in Egypt

யோசேப்பில் ஒரு எளிய கைதியை
ஜனங்கள் கண்டபோது
தேவன் எகிப்தில் ஒரு வலிமைமிக்க
மந்திரியாகக் கண்டார்

It`s not about what people see,
It`s what God says about you that matters

ஜனங்கள் எப்படிப் பார்க்கிறார்கள்
என்பதல்ல
தேவன் உங்களைப் பற்றி என்ன
சொல்லுகிறார் என்பதே காரியம்

**என் நினைவுகள்**
**உங்கள் நினைவுகள் அல்ல;**
**உங்கள் வழிகள்**
**என் வழிகளும்**
**அல்லவென்று**
**கர்த்தர் சொல்லுகிறார்**
**ஏசாயா 55:8**



## நான் யார்? – Who Am I?



- என் ஆஸ்திகளையெல்லாம் செலவு செய்தும் நான் குணமாகவில்லை
- இயேசுவைக்குறித்து கேள்விப்பட்டேன்
- எனக்கு இருந்த பிரச்சனையால் 12 வருடமாக கஷ்டப்பட்டேன்
- திரளாள கூட்டத்தில் இயேசுவின் வஸ்திரத்தை தொட்டேன்
- அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்தேன்
- இயேசு உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்
- நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்



# தேவன் விரும்பும் வாழ்வு

## The Life, God Desires

*S.Elavarasan Reagan*

**இ**ச்செய்தியை வாசிக்கும் அன்பரே, கொஞ்சகாலம் வாழக்கூடிய நாம் உலகத்தில் பாவத்தை எதிர்த்து தேவனுக்குப் பிரியமாய் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். "எனக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவனோ, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான்; என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள்" என்று வேதம் சொல்லுகிறது (நீதி மொழிகள் 8:36). நாம் பாவம் செய்வோமானால் அதினாலே பாதிக்கப்படப் போவது நம்முடைய ஆத்துமாவே. அது காப்பாற்றப்பட வேண்டுமானால் அந்த ஆத்துமாக்களின் மேய்ப்பர் இயேசுவின் வசனத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியவேண்டும் அப்படிக் கீழ்ப்படியும்போது மரணத்திலிருந்து விடுதலை கிடைக்கும்.

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" என பரிசுத்த வேதம் சொல்கிறது (ரோமர் 6:23). எனவே பாவத்திலிருந்து விலகி பரிசுத்தமாய் வாழும்படியாக உங்களை பாவத்திலிருந்து விடுவிக்கக்கூடிய ஆண்டவர் இயேசுவிடம் ஒப்புக்கொடுங்கள். அவர் பாவிகளை இரட்சிகும்படியாக வந்தவர் என அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறான்; "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" (1தீமோத்தேயு 1:15). ஒருவேளை நமக்குள் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்.

"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்" என ஆண்டவர் இயேசு கேள்வி எழுப்புகிறார் (மாற்கு 8:36,37). உலகப்பணக்காரர்களைப் பற்றி கேள்விப்படுகிறோம். ஒவ்வொரு வருடமும் சில பணக்காரர்கள் உலகப்பணக்காரர்கள் பட்டியலில் இடம்பெறுகிறார்கள். நிரந்தரமாக ஒருவன் உலகப்பணக்காரர் பட்டியலில் நீடித்து இருக்கிறாரா? அப்படி உலகத்தையே சம்பாதித்து வைத்துள்ள அவன் தன் ஜீவனை காப்பாற்ற முடியுமா? அல்லது அந்த ஜீவனுக்கு ஈடாக அவன் சம்பாதித்து வைத்துள்ளவைகள் ஈடாகுமா?

நம்முடைய ஜீவன் காக்கப்பட அந்த ஜீவனைக்கொடுத்த ஆண்டவர் இயேசுவினிடம் வாருங்கள். இயேசு சொல்கிறார்; "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றார்" (யோவான் 11:25). அவரை விசுவாசிக்கிறவர்கள் அழிவைக்காண்பதில்லை.

தேவனுக்குப் பிடித்தார்போல வாழ்ந்தவர்களில் ஆபிரகாமும் ஒருவன். "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது" (ரோமர் 4:3). இந்த ஆபிரகாமைப்போல காணாத தேவனை விசுவாசித்து தேவன் விரும்புகிற வாழ்க்கையை இந்தப்பூமிலே வாழ்வீர்களானால், நீங்களும் ஆபிரகாமைப்போல ஆசீர்வதிக்கப்படுவீர்கள். தேவன் இஸ்ரவேலில் முதல் ராஜாவாகிய சவுலை தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தினார். "ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்" (அப்போஸ்தலர் 13:22). நீங்களும் இவர்களைப்போல தேவன் விரும்பும் வாழ்வை நோக்கி பயணியுங்கள். அப்பொழுது அவர் நமக்காக வைத்திருக்கும் நிலையான, நித்திய நித்தியமாக, அவர் விரும்பும் வாழ்வைப் பெற்றுக்கொள்வீர்கள்.

சிறுவர் பகுதி

# அப்பம் புசித்துத் திருப்தியானதினாலே என்னைத் தேடுகிறீர்கள்

வேத பகுதி: யோவான் 6:24-29



ஒரு முறை ஜனங்கள் இயேசுவைத்தேடி வந்தார்கள். அப்பொழுது கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: மிகுந்த அக்கறையினால் அவரை விசாரிப்பதுபோல ரபீ, நீர் எப்பொழுது இங்கே வந்தீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர் என்னசொன்னார் தெரியுமா? நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அன்றைய நாட்களில் இயேசு ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் ஐயாயிரம் பேருக்கு கொடுத்து போஷித்ததைக் கண்ட ஜனங்கள், மீண்டும் அப்பத்தைக் கொடுப்பார் என்று அவரை நாட ஆரம்பித்தனர். இன்றைய நாட்களிலும் உணவுக்காக இயேசுவைப் பின்பற்றுகிறவர்களைப் பார்க்கிறோம். மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று நம் ஆண்டவர் சொன்ன வார்த்தையை அநேகர் நம்பாமற்போகிறார்கள்.

ஆகையால் தான் இயேசு அவர்களைப்பார்த்து அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார். அப்படியானால், நாங்கள் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். அதற்கு இயேசு: தேவனை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

இன்றைக்கு தேவனை நீங்கள் முதலாவது நம்பவேண்டும். அவரால் எல்லாம் கூடும் என்று விசுவாசிக்கவேண்டும். இதுதான் கிரியையுள்ள விசுவாசம். உணவு நம் எல்லோருக்கும் தேவை என்பதை நம் பரம பிதாவாகிய தேவன் அறிந்திருக்கிறார். இந்த உணவு நாம் சரீரத்தில் இருக்கும்வரை நமக்குத் தேவை. ஆனால் நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்கக்கூடிய போஜனம், அவருடைய வசனமே. அதற்கேற்ப கிரியை நடப்பிக்கவேண்டும். நடப்பிப்பீர்களா?

**மனப்பாட வசனம்:**

“அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல,
நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்”
(யோவா.6:27).

## வேத அறிவுப் போட்டி எண்: 273

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. இனிக் காணிக்கையை மதியார் அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக்கொள்ளவுமாட்டார் என எந்த தீர்க்கதரிசி சொன்னான்
2. கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. சாராள் என்று பெயர் வைத்தவர் எவர்?
4. கண்காணியானவன் தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தைப் எப்படிப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்?
5. எந்த நாளில் அவர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார்?
6. பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவர் எவர்?
7. உங்களில் பரதேசிக்கும் சுதேசிக்கும் எப்படிப்பட்ட நியாயம் இருக்க வேண்டுமென்று சொன்னார்?
8. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படுமா?
9. நீங்கள் இப்படிக் கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது என்றவன் யார்?
10. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் எது?

## வேதாகம ஆய்வு... 57

## சாமுவேல்
## Samuel

1. தேவனால் கேட்கப்பட்டவன் என்று அர்த்தம்
2. சாமுவேல் எல்கானாவின் மகன்
3. அவனுடைய தாய் அன்னாள் சாமுவேல் என்று பெயரிட்டாள் – 1சாமு.1:20
4. சாமுவேல் இஸ்ரவேலரை நியாயம் விசாரித்தான் – 1சாமு.7:6
5. இஸ்ரவேலர் ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டது சாமுவேலுக்கு தகாததாய்க் காணப்பட்டது – 1சாமு.8:6



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

May 2023





சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்ற
கூட்டத்தில் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வெளிவந்த
தேவசெய்திகள் அடங்கிய Vol.9 புத்தகத்தை
சகோதரர் பி.ஆர்.சாமி அவர்கள் வெளியிட்டார்கள்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

பெண்களுக்கான
சிறப்பு புத்தகம்
இன்றே வாங்கி
பயன்பெறுங்கள்



To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan